பல்கலைக்கழக மானியக்குழு நிதிநல்கையுடன்

## தேசியக் கருத்தரங்கம்

# இலக்கியத்தில் இறைக் கொள்கை

## ஆய்வுக் கட்டுரைத் தொகுப்பு

15.02.2018



## முதுகலைத் தமிழ்த்துறை


## ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் தன்னாட்சிக் கல்லூரி

தேசியத் தர மதிப்பீட்டின் அடிப்படையில் ‘முதல்’ தர நிர்ணயம் பெற்றது

கொடைக்கானல் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தின் இணைவு பெற்றது

DST FIST Supported College since 2015

பெரியகுளம் - 625601, தேனி மாவட்டம்.


Scanned by CamScanner

30. சித்தர்பாடல்களில் இறையியல் கோட்பாடுகள்
ஜோ. சகாய பவுலின் 152

31. சித்தர் இலக்கியங்களில் இறைக்கொள்கை
செல்வி. சுமதி 156

32. சித்தர்களின் இறைக்கொள்கை
ஜீ. ரத்னா 161

33. சித்தர்களின் இறைக்கொள்கை
மு. அனுசுயா 166

34. திவ்யப் பிரபந்தத்தில் இறைக்கொள்கை
வே. பிரீத்திகா 171

35. நாச்சியாரின் இறைக்கொள்கை
செல்வி. து. தனபாண்டிய தேவி 175

36. எட்டுத்தொகையில் ஐவகை நிலத்தெய்வங்கள்
சு. உமாதேவி 180

37. நற்றிணையில் இறையாண்மைச் சிந்தனைகள்
வா.போதுமணி 185

38. மருத நிலப்பாடல்களின் வழி இறையாண்மைச் சிந்தனைகள்
சு. உமா 188

39. நெய்தல் நிலப் பாடல்களின்வழி இறையாண்மைச் சிந்தனைகள்
க.மலர்விழி 193

40. திருக்குறளில் காணலாகும் பௌத்த சமயக் கோட்பாடுகள்
திருமதி. மு.நிவேதா வித்யாஹரன் 198

41. திருக்குறளில் காணலாகும் சமணநெறிக் கோட்பாடு
செல்வி ச.சரவணஜோதி 204

42. ஔவையாரின் ஞானக் குறளில் இறைக்கொள்கை
போ. துர்கா தேவி 209

43. நல்வழி காட்டும் இறையாண்மை
ர. தெரசா 212

44. வையத்தலைமைகொள்
முனைவர் க.சின்னப்பா 217

Scanned by CamScanner

# 30. சித்தர்பாடல்களில் இறையியல் கோட்பாடுகள்

ஜோ. சகாய பவுலின்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, பாத்திமா கல்லூரி,
மதுரை .

**முன்னுரை :**

இன்றைய அளவிலான கடவுள் பற்றிய கோட்பாடு வெவ்வேறு கண்ணோட்டத்தில் காணப்படுகிறது. இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையேயான உறவுநிலையின் அடிப்படையில் இறையியல் கோட்பாடு உருவாகிறது. சிலர் கடவுளை தலைவலியைப் போக்கும் தலைவலி மாத்திரையைப் போன்ற பார்வையில் காண்கின்றனர். தலைவலி வரும் போது மாத்திரை எடுத்துக் கொள்வது போல துன்பம் வரும் போது, கடவுளைத் தேடுகின்றனர். வேறு சிலர் கடவுளைச் சலவைக்காரர் போல பார்க்கின்றனர். துணியின் அழுக்கினைத் தூய்மைப்படுத்த உதவும். சலவைக்காரர் போல, பாவம் செய்தவுடன் மன்னிப்பு பெறவும், குற்ற உணர்விலிருந்து வெளிவருவதற்கும் கடவுள்தான் ஆன்மாவைத் தூய்மைப்படுத்த முடியும் என்பது போலப் பார்க்கின்றனர்.

இது மதத்திற்கு மதம் வேறுபட்டு நிற்கிறது. இந்துமதம் ஆன்மாவின் பிறப்பிடம் இறைவன் என்ற இறையியல் சிந்தனையையும், கிறிஸ்துவம் அன்பே கடவுள் என்ற சிந்தனையையும், இஸ்லாம் தீமையை அழித்து நன்மையை நிலைநாட்டுவதே கடவுளின் பணி என்ற சிந்தனையையும் பறைசாற்றுகிறது. இவ்வாறாக வெவ்வேறு மதம் வெவ்வேறு பாதையில் பயணித்தாலும் 'சித்தர்கள் பாடலானது' சாதி, மதம் கடந்த மூடநம்பிக்கையற்ற இறையியல் கோட்பாட்டினை எடுத்துரைக்கிறது என்பதை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது. மக்களின் அன்றாட வாழ்வு அனுபவத்தை விசுவாச ஒளியில் ஆய்ந்தறிவதே இறையியல் கோட்பாடு ஆகும்.

**சித்தர் பாடல்களில் இறையியல் கோட்பாடுகள்**

தமிழ் இலக்கிய வரலாற்றை உற்றுநோக்கும் போது, இறையியல் கோட்பாடுகளை முழுமையாகக் கடைபிடித்தவர்கள் சித்தர்களே என்பது தள்ளத் தெளிவாகிறது. 'சாதியம் கடந்த ஒருமைபாடு கொண்ட' இறையியலாளராக வாழ்ந்திருந்தனர் என்பதனை, சித்தர் பாடல் வழி அறிய முடிகிறது.



Scanned by CamScanner